பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 120

30.10.2026

லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் முன்னாள் உதவியாளருக்கு 2 ஆண்டுகள் சிறை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பு

கடந்த 2015-ம் ஆண்டு, புகார்தாரர் தனது குடும்பத்திற்கும், தனது மூத்த சகோதரரின் குடும்பத்திற்கும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கக்கோரி சேலம் மாவட்டம், சேலம் மேற்கு தாலுகா அலுவலகம், வட்ட வழங்கல் பிரிவில் மனு அளித்திருந்தார். இது தொடர்பாக திரு.ஜே.அந்தோனி தாஸ், உதவியாளர், சி1 பிரிவு, சேலம் மேற்கு வட்ட வழங்கல் அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்கள் புகார்தாரரின் மனுவை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சேலம் பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 25.03.2015 அன்று மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாரரிடமிருந்து திரு.ஜே.அந்தோனி தாஸ், உதவியாளர் அவர்கள் லஞ்சபணம் ரூ.5,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு ஊழல் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சேலம் மாவட்டத்தில் வழக்கு நடைபெற்று வந்தது. நேற்று 29.10.2026ந் - தேதி திரு.ஜே.அந்தோனி தாஸ் அவர்களுக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணையும் மற்றும் ரூ.10,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

PRESS RELEASE – 120
30.10.2026

FORMER ASSISTANT CONVICTED IN BRIBE CASE

During 2015, the complainant submitted an application at Taluk Supply Office, Salem west taluk office, Salem District, seeking the issuance of new family cards for his family and his elder brother's family. In this regard, Tr.J.Antony Doss, Assistant, C-1 Seat, Taluk Supply Office, Salem west taluk office, Salem District, demanded Rs.5,000/- as bribe from the complainant for issuing new family cards. The complainant not willing to give bribe, preferred complaint with Vigilance and Anti– Corruption, Salem Detachment. In this connection a trap was organized on 25.03.2015. During the trap proceedings, Tr. J. Antony Doss, Assistant received the bribe amount of Rs.5,000/- from the complainant. The accused was arrested and remanded. On completion of investigation, the case was charge sheeted against the accused. Yesterday 29.10.2026 the Special Court Judge, Salem pronounced the judgment against Tr. J. Antony Doss, formerly Assistant and sentenced him to undergo Rigorous Imprisonment for 2 years and fine of Rs.10,000/-.